## உள்ளடக்கம்

முகவுரை .......... 2

தரக் கொள்கை .......... 3

யெஸ் பேங்க் கிளைகளின் சிறப்பு அம்சங்கள் .......... 3

கிளைகளில் வாடிக்கையாளர் சேவை .......... 3

'யெஸ் டச்' நேரடி வங்கி வழிகளின் சிறப்பு அம்சங்கள் .......... 4

வாடிக்கையாளர்-வங்கி உறவில் பொதுவான பகுதிகள் .......... 6

உங்கள் வாடிக்கையாளரை அறிந்துக் கொள்ளுங்கள் (கேஒய்சி) விதிமுறைகள் .......... 9

நிலை அறிவுறுத்தல்கள் மற்றும் தன்னியக்க தீர்வக சேவைகள் .......... 10

பாதுகாப்பான வங்கி அனுபவத்திற்கு வாடிக்கையாளர் பின்பற்ற வேண்டிய நல்ல பயிற்சிகள் .......... 12

புகார்களின் குறைதீர்ப்பு .......... 16

# முகவுரை

அதிக அளவில் கிளைகள் இருந்தாலும், இந்திய வங்கி துறை வாடிக்கையாளர் சேவையில் இன்னமும் சிறந்த தரத்தை எட்டவில்லை என்று யெஸ் பேங்க் எண்ணுகிறது. இந்த எண்ணமே யெஸ் பேங்க்கை இந்திய வாடிக்கையாளர்களுக்குச் சேவை தரத்தில் சிறப்பான பணியாற்றவும், இந்திய மற்றும் உலக அளவில் ஒரு மாதிரி வங்கியை உருவாக்கவும் உத்வேகம் அளித்தது.

பொறுப்பான, சிறப்பான வங்கி பணிகளாலே சமுதாய-பொருளாதார நோக்கங்களை அடைய முடியும் என்று யெஸ் பேங்க் திட்டவட்டமாக நம்புகிறது. அவ்வாறு நிகழும் போது வாடிக்கையாளர்கள் வங்கியை அணுகுவர். சிறப்பான வங்கி அனுபவத்திற்கு, வாடிக்கையாளர் திருப்தியே முதல் காரணமாக அமைகிறது.

மேற்கூறிய தேவைகளைப் பூர்த்திச் செய்ய, யெஸ் பேங்க்கின் இந்த சாசனத்தின் கோட்பாடே அடிப்படை கருவியாக கருதப்படுகிறது. அவ்வாறே இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டது. பயனாளிகளிடம் ஆலோசிக்கப்பட்டுத் தயாரித்த இந்த ஆவணம் வாடிக்கையாளர் திருப்தியில் யெஸ் பேங்க்கின் பொறுப்பைப் படம்பிடித்தும், வங்கி அதிகாரிகள் மற்றும் அலுவலர்களிடம் அவர்களின் பொறுப்புகள், பங்குகளை உறுதி செய்வதாகவும் அமைகிறது. இந்தச் சாசனம் வாடிக்கையாளர்களிடம் யெஸ் பேங்க்கின் பொறுப்புகள், பங்குகள், வங்கியின் புகார்கள் நிவர்த்திச் செய்யும் முறைகளை விளக்குவதோடு மட்டுமல்லாமல் சுமுகமான வாடிக்கையாளர்-வங்கி உறவில் வாடிக்கையாளரின் ஆரோக்கியமான பங்குகளையும் விளக்குகிறது.

சாசனம் நியாயமான வங்கி பயிற்சிகளை உயர்த்தவும் வாடிக்கையாளர் சேவை சம்மந்தப்பட்ட பல்வேறு பணிகள் குறித்த தகவல்களைத் தரவும் தயாரிக்கப்பட்டது.

சேவை தரத்தை உயர்த்த தொடர்ந்து பாடுபடும் யெஸ் பேங்க் வாடிக்கையாளர்களிடம் தொடர் ஆலோசனைகளைக் கருத்தரங்குகள், வாடிக்கையாளர் சந்திப்புகள் மற்றவை மூலம் பெற்று வாடிக்கையாளர் சேவையில் எங்களின் எல்லைகளை உயர்த்தவும், விரிவுபடுத்தவும் செய்கிறோம். எனினும், வாடிக்கையாளர்கள் எங்களின் வெவ்வேறு சேவைகள் குறித்துத் தங்கள் அனுபவங்களை வங்கியில் தெரிவிக்க ஊக்கப்படுத்துகிறோம். வரும் ஆண்டுகளில் மாநில மொழிகளில் சாசனத்தை உருவாக்குவோம்.

இடம் : ________ தேதி: _________

அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரரால் இடப்பட்ட கையொப்பம் குறிப்பு _____________,ன் படி இந்தக் கையேட்டில் தரப்பட்ட தகவல்கள் மாற்றங்களுக்ம்/திருத்தங்களுக்கும் உட்பட்டது. இந்தக் கையேட்டை உரிமை கோரும் சட்ட ஆவணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. இது வாடிக்கையாளர்-வங்கி இடையே நல்ல புரிதலுக்காகத் தயாரிக்கப்பட்டது.
வங்கியின் பயன்பாடுகள் மற்றும் சேவைகள் குறித்த முக்கியத் தகவல்கள் மட்டுமே இந்தக் கையேட்டில் தரப்பட்டுள்ளது. மேலும் விவரங்களை/தகவல்களை அறிவதற்கு, நீங்கள் www.yesbank.in என்ற இணையதளத்தைப் பார்க்கலாம் அல்லது எமது கிளை அலுவலகங்களுக்கு நேரில் வருகை தரலாம் /தொலைபேசி மூலமாகத் தொடர்புகொள்ளலாம் /கடிதம் எழுதலாம்.

## தரக் கொள்கை

*"**இந்தியாவில் உயர்தர உலக வங்கியாக ஆவதற்காக' தனது குறிக்கோளில் செயல்முறைசார் மேம்பாடு, புதுமை புகுத்தல், நவீன தொழில்நுட்பம், துறையிலேயே**-சிறந்த ஒழுங்குமுறைகள் & செயல்முறைகள் போன்றவற்றின் வாயிலாகத் தலைசிறந்த சேவை அனுபவத்தை உறுதிசெய்வதற்கு யெஸ் வங்கி கடுமுயற்சி செய்யும்'.*

குறிக்கோள்கள் –

- வாடிக்கையாளர்களிடம் அதிக அளவு திருப்தியையும், குறைந்தளவு புகார்களையும் உறுதிசெய்தல்
- சட்டதிட்டங்களை அமுல்படுத்தும் போதும், செயலாற்றும் போதும், மிகக் குறைந்த பிழைகளையே உறுதிசெய்தல்
- திறமைமிக்கவர்களைப் பணியிலமர்த்தி அவர்களுக்கு நல்ல பயிற்சியளித்து வேலை திறனை பெருக்குதல்
- வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்கள் தரும் ஆலோசனையின்படி மாற்றங்களுக்குத் தகுந்தவாறு அமைத்தல்

## யெஸ் பேங்க் கிளைகளின் சிறப்பு அம்சங்கள்

- விசாரணை சேவை வேண்டுகோள்களுக்கும் மற்றும் தொடர்ந்து சிறந்த சேவை அனுபவத்தை வழங்குவதற்கும் பாடுபட, அனைத்து கிளைகளிலும் தனியாக '***யெஸ் பார் யூ***' கவுண்டர் உள்ளது
- நியமிக்கும் வசதியை அனைத்து வைப்பு வரவு கணக்குகளுக்கும் உருவாக்குவது (அதாவது தனி நபர் துவங்கிய வரவு கணக்கு)
- ஒவ்வொரு காலகட்டத்திற்கும் வெவ்வேறு வைப்புதிட்டங்கள் / சேவைகள் தொடர்பாகத் தகவல்கள் தருகிறது
- அடிப்படை வங்கி சேவைகளை அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் தருவது, மேலும் மூத்த குடிமக்கள், ஓய்வூதியதாரர்கள், பெண்கள் மற்றும் தனிநபர்களுக்குச் சிறு நகரம் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள கிளைகளிலும் அதிகப் பலன்கள் தருகிறது.
- சிறப்பு அடிப்படை வங்கி சேவைகளில் பேயபிள் அட் பார் (மல்டிசிட்டி காசோலை புத்தகம்), எந்தக் கிளையிலும் பரிவர்த்தனை வசதி, குறுஞ்செய்தி எச்சரிக்கைகள், மின்னஞ்சல் விழிப்பூட்டல்கள், மின்னணு தீர்வக சேவைகள் / நிலை அறிவுறுத்தல்கள், பயன்பாட்டுக் கட்டணச்சீட்டுப் பணத்தொகை செலுத்தங்கள், இணையதள வங்கியியல், மொபைல் தொலைபேசி வங்கியியல் மற்றவையும் அடங்கும்
- பல்வேறு பணம் அனுப்பும் சேவைகளான கேட்பு வரைவோலைகள், பே ஆர்டர்கள், ஆர்டிஜிஎஸ், என்இஎப்டி மற்றும் சிலவற்றை வங்கி அளிக்கிறது
- கிளை வேலை நேரங்கள் கிளைகளுக்கு வெளியே உள்ள அறிவிப்புப் பலகையில் தெரியப்படுத்தப்படுகிறது
- காசோலை தீர்வகத்திற்கான வெட்டுநிலை நேரங்கள் காசோலை போடும் பெட்டியின் மீது தெரியப்படுத்தப்படுகிறது
- ஒவ்வொரு காலகட்டத்திற்கும் வெவ்வேறு வைப்பு திட்டங்களின் வட்டிவிகிதங்கள் தெரியப்படுத்தப்படுகிறது
- பல்வேறு அடிப்படை வங்கி சேவைகள் மற்றும் வங்கி அளிக்கும் வசதிகளான செலுத்துதல், வசூல்கள் மற்றும், இதர சேவைகள் ஆகியவற்றுக்குக் கட்டண விவரங்கள் தெரியப்படுத்தப்படுகிறது
- புகார் மற்றும் ஆலோசனை பெட்டியை அளித்தும் மற்றும் கருத்துகள், ஆலோசனைகளை ஊக்குவித்து அதன் மூலம் தொடர்ந்து சேவைகள் முன்னேற வழிவகுக்கிறது
- வாடிக்கையாளர் புகார்கள் / குறைகள் தொடர்பாகப் பணியாற்றும் பிராந்திய மற்றும் தலைமை அலுவலகங்களின் முகவரிகள் தெரியப்படுத்தப்படுகிறது

## கிளைகளில் வாடிக்கையாளர் சேவை

மேம்பட்ட மற்றும் சீரான சேவை வழங்கல் மற்றும் வாடிக்கையாளர்களின் வசதிக்காகக் கிளைகளில் நாங்கள் பின்வரும் அம்சங்களை உறுதிப்படுத்துகிறோம்:-

- முறையான நாற்காலி மேஜைகள், குடிநீர் போன்றவற்றுடன் மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற சிறப்புக் கட்டமைப்புகளுடன் கூடிய முறையான இடவசதியுடன் கிளைகள் அமைத்திருக்க வேண்டும்.
- சில கிளைகளில் மே ஐ ஹெல்ப் யூ (எஸ் பார் யூ) டெஸ்க் வசதியை வழங்க வேண்டும்

- ஆங்கிலம், இந்தி மற்றும் சம்பந்தப்பட்ட பிராந்திய மொழியில், கிளைகளில் தொடர்புடைய அறிவிப்புகளைக் காட்சிப்படுத்த வேண்டும்
- எங்களைத் தொடர்புகொள்ள வசதியாக எல்லாக் கிளைகளின் கவுண்டரிலும் மும்மொழி அறிவிப்பை வழங்க வேண்டும்
- வாடிக்கையாளர்களை எதிர்கொள்ளவும், அவர்கள் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளவும் உதவும் வகையில் முறையான பயிற்சியானது அலுவலர்களுக்கு வழங்கப்பட வேண்டும்
- இந்தி, ஆங்கிலம் மற்றும் சம்பந்தப்பட்ட பிராந்திய மொழிகளில் வங்கியில் கிடைக்கும் அனைத்து வசதிகளும் விவரங்களும் அடங்கிய கையேடுகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்க வேண்டும்
- ஊழியர்களிடமும் பொதுமக்களிடமும் நம்பிக்கையை உண்டாக்கும் வகையில் கிளையில் போதுமான பாதுகாப்பு இருக்க வேண்டும்
- அனைத்து ஊழியர்களுக்கும் அவர்களின் பெயர் மற்றும் புகைப்படம் அடங்கிய அடையாள பேட்ஜ் வழங்கப்பட வேண்டும்
- அவ்வப்போது அடிப்படை மேற்பார்வை வேலைகள் டெஸ்க் மற்றும் பணிகளை மாற்றியமைக்க வேண்டும்
- கிளைகள் மூலம் அளிக்கப்படும் சேவைகளின் தரத்தை ஆய்வு செய்யும் வகையில் அவ்வப்போது பிராந்திய / தலைமை அலுவலகத்திலிருந்து முதுநிலை அதிகாரிகள் அவ்வப்போது நிகழ்விடத்திலேயே சோதனைகளை மேற்கொள்ள வேண்டும்
- வாடிக்கையாளர் சேவை தொடர்பாக ஆண்டு விருதுகள்/சுழல் கேடயத்தை சிறந்த கிளைகளுக்கு வழங்க வேண்டும்
- வாடிக்கையாளர் சேவை கூட்டங்கள், தணிக்கை மற்றும் வாடிக்கையாளர் திருப்தி கருத்துக்கணிப்புகளை அவ்வப்போது மேற்கொள்ள வேண்டும்

## ‘யெஸ் டச்’ நேரடி வங்கி வழிகளின் சிறப்பு அம்சங்கள்

எங்களிடம் வங்கி பரிவர்த்தனை செய்ய, நாங்கள் அளிக்கும் பல மாற்று, இணக்கமான வழிகள் –

**சில்லறை இணையதள வங்கியியல்**

- இரண்டு அடுக்குகளில் பாதுகாப்பு நம்பகத்தன்மை இது தவறான பயன்படுத்தலை தடுத்துப் பாதுகாப்பை பலப்படுத்துகிறது –
  - தனிநபர் வாடிக்கையாளர்கள் – அனைத்து இணையதள வங்கி பரிவர்த்தனைகளுக்கும் ஒருமுறை பயன்படுத்தக்கூடிய கடவுச்சொல் ஒன்று வாடிக்கையாளர்களின் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணுக்கு அனுப்பப்படும்
  - தனிநபர் அல்லாத வாடிக்கையாளர்கள் – ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் ஒருமுறை பயன்படுத்தக்கூடிய கடவுச்சொல் ஒன்று உருவாக்கப்படும்
- தனிநபர் வாடிக்கையாளர்கள் ‘ஒற்றை PIN அணுகல்’ மூலம் டெபிட் / எடிஎம் கார்டு பின்னை பின்வருவனவற்றுக்காக பயன்படுத்த முடியும்
  - இணையதள வங்கியியல் பரிவர்த்தனைகளுக்கு முதல் முறை பதிவு செய்யலாம்
  - கடவுச் சொல்லை மறந்துவிட்டால் மீண்டும் உருவாக்கலாம்
- இணையதள வங்கி பரிவர்த்தனை அளிக்கும் சிறப்பு அம்சங்கள் -
  - நிரந்தர வைப்புகள் மற்றும் தொடர் வைப்புகளை ஆன்லைன் மூலம் பதிவுசெய்யலாம்
  - பயன்பாட்டு கட்டணச்சீட்டு பணத்தொகை செலுத்தங்களைப் பதிவு செய்யலாம்
  - தேர்வுசெய்த முன்னணி நிதி நிறுவனங்களில் பரிவர்த்தனை செய்ய உதவும் **MF ஆன்லைன்** சேவைகள் மூலம் காகித ஆவணங்கள் இல்லாமலேயே முதலீடு செய்யலாம்
  - ஆன்லைன் ஷாப்பிங் / டிராவல் புக்கிங்
  - யெஸ் பேங்க் கணக்குகளுக்கும் வர்த்தக வரவு கணக்குகளுக்கும் நிதி மாற்றீடுகளை செய்வது
  - யெஸ் பேங்க் அல்லாத கணக்குகளுக்கு என்இஎப்டி / ஆர்டிஜிஎஸ் / ஐஎம்பிஸ் மூலமாக நிதி மாற்றீடுகளை செய்வது
  - கேட்பு வரைவோலைகளை வழங்குவது
  - கணக்கு அறிக்கைகளை வழங்குவது
  - தனிப்பட்ட மற்றும் வரவு கணக்குத் தகவல்கள்
  - குறுஞ்செய்தி / மின்னஞ்சல் விழிப்பூட்டல்களுக்கு சந்தா பதிவு செய்வது / மாற்றுவது
  - பின்வருவன போன்ற மதிப்புக் கூட்டுச் சேவைகளுக்கு MySpace; மின்னஞ்சல் கணக்கு அறிக்கை பதிவு, ஒவ்வொருவரின் தேவைக்கேற்ற வைப்பு சீட்டு, உங்கள் கணக்கு மாதந்திர இருப்பை அறிதல், நினைவூட்டுதல் சேவை

- பண கண்காணிப்பு – வெவ்வேறு வங்கிகணக்குகளால் குறிப்பிட்ட கணக்கு பெருகுதல், தரகு கணக்குகள், கட்டணச்சீட்டு நினைவூட்டல்கள், அடிக்கடி மாறும் வரவு கணக்குகள் மமுதலியவை

**மொபைல் தொலைபேசி வங்கியில்**

- யெஸ் பேங்க்கில் பதிவு செய்துள்ள மொபைல் எண்ணில் இருந்து 'YESMOB' என்று 567678 என்ற எண்ணுக்கு SMS அனுப்புவதன் மூலம் யெஸ் பேங்க் சில்லறை இணையதள வங்கியியலில் பதிவுசெய்துள்ள வாடிக்கையாளர்கள் மொபைல் தொலைபேசி வங்கியில் சேவையைப் பயன்படுத்த தொடங்கலாம்

- மொபைல் தொலைபேசி வங்கியியல் அளிக்கும் சிறப்பு சேவைகளில் அடங்கியவை -

  - இருப்புநிலை விசாரணை
  - சிறுகணக்கு அறிக்கை
  - விநியோகிக்கப்பட்ட காசோலைகளுக்குச் பணம் செலுத்தல் நிறுத்தம் வேண்டுகோள்
  - காசோலை நிகழ்நிலை விசாரணை
  - காசோலை புத்தகம் வழங்க வேண்டுகோள்
  - யெஸ் பேங்க் கணக்குகளுக்கு நிதி மாற்றீடுகள் செய்வது
  - யெஸ் பேங்க் அல்லாத கணக்குகளுக்கு என்இஎப்டி / ஐஎம்பிஸ் மூலமாக நிதி மாற்றீடுகள் செய்வது
  - கணக்கு அறிக்கைகள்
  - கால வைப்பு விவரங்கள் பற்றிய விசாரணை
  - பிரிபெய்டு மொபைல் ரீசார்ஜ், டிடிஎச் மற்றும் கட்டணச்செலுத்தம் போன்ற வணிகர் சேவைகள்

**குறுஞ்செய்தி வங்கிப் பரிவர்த்தனை**

ஓர் ஒற்றை மொபைல் எண்ணைப் (+91-9840909000) பயன்படுத்தி 24 x 7 அளவில் வங்கியின் எல்லா குறுஞ்செய்தி வங்கியியல் தேவைளையும் பயன்படுத்தித் தகவல்களைப் பெறலாம்.

| | | |
|---|---|---|
| மொபைல் தொலைபேசி பதிவுசெய்தல் | YESREG | YESREG <Customer ID> |
| கணக்கு இருப்பு விசாரணை | YESBAL | YESBAL <Customer ID> |
| கணக்கின் கடைசி 5 நாட்களின் பரிவர்த்தனைகள் | YESTXN | YESTXN <Customer ID> |
| காசோலை நிகழ்நிலை விசாரணை | YESCST | YESCST <Customer ID><cheque number> |
| காசோலை நிறுத்துதல் கோரிக்கை | YESSTP | YESSTP <Customer ID><cheque number> |
| காசோலை புத்தகக் கோரிக்கை | YESCHQ | YESCHQ <Customer ID> |
| கணக்குடன் இணைக்கப்பட்டுள்ள நிரந்தர வைப்பு தொகைகளின் விவரம் | YESFDQ | YESFDQ <Customer ID> |
| கணக்கு அறிக்கை கோரிக்கை | YESSTM | YESSTM <Customer ID> |
| மேலே உள்ள அனைத்து ஆதரிக்கப்படும் கோரிக்கைகளின் பட்டியல் | YESHLP | YESHLP <Customer ID> |

ஒரே வாடிக்கையாளர் அடையாளத்தில் பல கணக்குகள் இணைக்கப்பட்டிருந்தால், கோரிக்கைகளின் முடிவில் தகவல் வேண்டிய கணக்கு எண்ணை இடவும். உதாரணம்: YESSTP <Cust ID><Cheque No.><Account No.>

**மிஸ்டு கால் பேங்கிங்**

நீங்கள் பதிவுசெய்துள்ள மொபைல் எண்ணில் இருந்து "YESREG <Cust ID>" என்ற வடிவத்தில் (+91-9840909000) என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்பி மிஸ்டு கால் பேங்கிங்கில் பதிவு செய்யலாம்

- 09223920000 என்ற எண்ணுக்கு மிஸ்டு கால் கொடுத்து உங்கள் கணக்கு இருப்பை அறியலாம்
- 09223921111 என்ற எண்ணுக்கு மிஸ்டு கால் கொடுத்து உங்கள் கடந்த 5 பரிவர்த்தனை பட்டியலைப் பெறலாம்

**கவனத்தில் கொள்ளவும்:-**

- பல கணக்குகள் இணைக்கப்பட்டிருந்தால், மிஸ்டு காலின் போது எல்லாக் கணக்குகளின் இருப்பும் குறுஞ்செய்தியில் அளிக்கப்படும், ஆனால் கடைசி 5 பரிவர்த்தனைகளைக் கோரும் போது முதன்மை கணக்கு எண்ணின் விவரங்கள் மட்டுமே வழங்கப்படும்
- மிஸ்டு கால் பேங்கிங்கின் முதன்மை கணக்கு எண்ணை மாற்ற, YESDEF <Cust ID><Account No.>என்ற வடிவத்தில் (+91-9840909000) என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்பவும்

- உங்கள் மொபைல் எண் பல வாடிக்கையாளர் அடையாளங்களில் பதிவுசெய்யப்பட்டிருந்தால், நீங்கள் இந்தச் சேவையைப் பெற முடியாது

**எடிஎம்கள் மற்றும் டெபிட்/எடிஎம் அட்டைகள்**

- உலகெங்கும் உள்ள பங்குதாரர் வங்கி எடிஎம்களில் அடங்கியவை-என்எப்எஸ், விசா, மாஸ்டர்கார்டு
- யெஸ் பேங்க் எடிஎம்கள் அளிக்கும் சிறப்புச் சேவைகளில் அடங்கியவை -
    - காசோலை வைப்புகள்
    - இருப்புநிலை விசாரணை
    - சிறுகணக்கு அறிக்கை
    - காசோலை புத்தகம் வழங்க வேண்டுகோள்
    - கணக்கு அறிக்கைகள்
    - PIN மாற்றுதல்
    - நிரந்தர வைப்புக; கணக்கை திறத்தல்
    - லீட் உருவாக்கம் (ஒய்பிஎல் இல்லாத வாடிக்கையாளர்களுக்காக)
    - டாடா ஸ்கை டிடிஎச் ரீசார்ஜ்
    - மொபைல் தொலைபேசி ரீசார்ஜ்
- உலகெங்கும் உள்ள பங்குதாரர் வங்கி எடிஎம்கள் அளிக்கும் சிறப்பு சேவைகள்
    - பணம் எடுத்தல்
    - இருப்புநிலை விசாரணை
    - PIN மாற்றுதல்
- ஏடிஎம்களில் இருந்து பணம் எடுப்பதற்கும் ஷாப்பிங் டெர்மினல்கள் (பிஓஎஸ் டெர்மினல்கள்) மூலமாக பணம் செலுத்துவதற்கும் டெபிட் அட்டைகளைப் பயன்படுத்தலாம் POS டெர்மினல்கள்)/பேமன்ட் கேட்வேக்கள்

**கிரெடிட் கார்டு**

யெஸ் பேங்க் கிரெடிட் கார்டுகள் அற்புதமான அம்சங்கள் மற்றும் இணையற்ற நன்மைகளையும் வழங்குகின்றன! அவற்றில் சில:

- · உங்கள் வாழ்க்கைமுறைக்கு ஏற்ற பலதரப்பட்ட கிரெடிட் கார்டுகள்
- · கிரெடிட் வழங்குவதில் சிறந்த வட்டி விகிதங்கள்
- · இணையற்ற வெகுமதிகள் திட்டம், வெகுமதி புள்ளிகள் ஒருபோதும் காலாவதியாகாது
- · இந்தியா முழுவதும் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் எரிபொருள் நிரப்ப கூடுதல் கட்டணத்தில் இருந்து விலக்கு

## வாடிக்கையாளர்-வங்கி உறவில் பொதுவான பகுதிகள்

**சேமிப்பு வங்கி கணக்கு**

- தனி வாடிக்கையாளர்களுக்கு எதிர்காலத் தேவைகளைச் சமாளிக்கச் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கச் சேமிப்பு வங்கி கணக்குகள் வடிவமைக்கப்பட்டது
- தொகையைக் காசோலைகள் டெபிட்-எடிஎம் அட்டை இணையதள வங்கி பரிவர்த்தனை மூலமாக எடுக்கும் மற்றும் வைப்பில் வைக்கவும் வசதி
- அறக்கட்டளைகளால்/கூட்டுறவுச் சங்கங்களால் வங்கி கணக்குகள் தொடங்கலாம் (ஆர்பிஐ) ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா அங்கீகரிகப்பட்டுள்ளவாறு
- 1 செப்டம்பர் 2017 தேதியில் இருந்து அமலுக்கு வந்துள்ளபடி, பின்வரும் வட்டி விகிதங்கள் தினசரி முடிவு இருப்புக்காக பொருந்தும், மற்றும் காலாண்டுதோறும் செலுத்தப்படும். குறைந்தபட்ச இருப்பு: 1/-ன் மடங்குகளில் செலுத்த வேண்டும்.

| சேமிப்பு இருப்புகள் | வட்டி விகிதங்கள் அமல் தேதி 1 செப் 17 |
|---|---|
| ரூபாய் 1 லட்சத்திற்கும் குறைவு | ஆண்டுக்கு 5% |
| 1 லட்சம் முதல் 1 கோடியை விடக் குறைவு | ஆண்டுக்கு 6% |
| 1 கோடி மற்றும் அதற்கும் அதிகம் | ஆண்டுக்கு 6.25% |

இந்திய ரூபாய் 100 கோடிக்கும் அதிகமான தொகைகளுக்கு கிளையை அல்லது உங்களுக்கு உரிய ரிலேஷன்ஷிப் மேனேஜரைத் தொடர்பு கொள்ளுங்கள். விகிதங்கள் யெஸ் பேங்கின் சுய தீர்மானத்தின்படி மாறுதலுக்கு உட்பட்டவை. நிபந்தனைகளுக்கு உட்பட்டவை.

- ஏஎஸ்பிஏ விண்ணப்பம் என்பது பங்குச்சந்தை தொடர்பாகப் பொது மக்களுக்கு வழங்கப்படுவது, கணக்கில் இருந்து நேரடியாக பற்று வைக்கப்படும்.
- கணக்குதாரர் பெயரில் தரப்படும் காசோலைகள், லாப உத்திரவாதங்கள் அவரின் கணக்கிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும். நிதி நிறுவனங்கள் கணக்குதாரர்களுக்குக் கையெழுத்திட்டு தருவது எடுத்துக்கொள்ளப் படமாட்டாது
- துவக்கப்பட்டுத் தொடர்ச்சியாக இரண்டாண்டுகள் பரிவர்த்தனை நடைபெற்ற எந்த கணக்கும் செயலற்ற கணக்காகக் கருதப்படமாட்டாது
- கணக்குதாரர் குறைந்த சராசரி மாதாந்திர/காலாண்டு இருப்புத்தொகையாக ஒவ்வொரு காலகட்டத்திற்கும் வங்கி அட்டவணை குறிப்பிடும் தொகையை வைத்திருக்க வேண்டும். இல்லையெனில் சேவை தொகை வசூலிக்கப்படும்.
  **காலாண்டு இருப்புத்தொகை (எக்யுபி)** கணக்கிடும் முறை - சராசரி கடைசி நாள் (இஓடி) கணக்கில் குறிப்பிட்ட நிதி காலாண்டில் இருக்கும் இருப்புத்தொகை (ஏப்-ஜூன், ஜூலை-செப், அக்-டிச, ஜன்-மார்ச்) உம். (நாள் இறுதி இருப்புத்தொகை நாள் 1+ நாள் இறுதி இருப்புத்தொகை நாள் 2…...) நிதி காலாண்டின் மொத்த நாட்களின் எண்ணிக்கை
  **மாதாந்திர இருப்புத்தொகை (எஎம்பி)** கணக்கிடும் முறை - சராசரி கடைசி நாள்(இஓடி) கணக்கில் குறிப்பிட்ட மாதத்தில் இருக்கும் இருப்புத்தொகையும்.</355> (நாள் இறுதி இருப்புத்தொகை நாள் 1+ நாள் இறுதி இருப்புத்தொகை நாள் 2…...) மாதத்தின் மொத்த நாட்களின் எண்ணிக்கை

**நடப்புக் கணக்குகள்**

- நடப்புக் கணக்நடப்புக் கணக்கு என்பது கணக்கின் இருப்பு அல்லது குறிப்பிட்ட ஒப்புக் கொள்ளப்பட்ட தொகை ஆகியவற்றைப் பொறுத்து எந்த நேரமும் பணத்தை டெபாசிட் செய்யவும், திரும்பப் பெற உதவும் ஒரு வணிகம் சார்ந்த கணக்காகும்.
- நடப்புக் கணக்கை தனிநபர்கள், உரிமைத்துவ நிறுவனங்கள், கூட்டு நிறுவனங்கள், தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள், குறிப்பிட்ட வரம்பு கொண்ட கூட்டு நிறுவனங்கள், ஒரு நபர் நிறுவனங்கள், இந்து கூட்டுக் குடும்பங்கள், அறக்கட்டளைகள், கூட்டுறவுச் சங்கங்கள், சங்கங்கள் போன்றவர்கள் துவங்கலாம்
- நடப்புக் கணக்கில் உள்ள இருப்புத்தொகைக்கு வட்டி வழங்கப்படமாட்டாது
- துவக்கப்பட்டுத் தொடர்ச்சியாக இரண்டாண்டுகள் பரிவர்த்தனை நடைபெற்ற எந்த கணக்கும் செயலற்ற கணக்காகக் கருதப்படமாட்டாது
- கணக்குதாரர் குறைந்த சராசரி மாதாந்திர/**காலாண்டு இருப்புத்தொகையாக** ஒவ்வொரு காலகட்டத்திற்கும் வங்கி அட்டவணை குறிப்பிடும் தொகையை வைத்திருக்க வேண்டும். இல்லையெனில் சேவை தொகை வசூலிக்கப்படும். காலாண்டு இருப்புத்தொகை (எக்யுபி) கணக்கிடும் முறை - சராசரி கடைசி நாள் (இஓடி) கணக்கில் குறிப்பிட்ட நிதி காலாண்டில் இருக்கும் இருப்புத்தொகை (ஏப்-ஜூன், ஜூலை-செப், அக்-டிச, ஜன்-மார்ச்) உம். (நாள் இறுதி இருப்புத்தொகை நாள் 1+ நாள் இறுதி இருப்புத்தொகை நாள் 2…...+நாள் இறுதி இருப்புத்தொகை n) நிதிகாலாண்டின் மொத்த நாட்களின் எண்ணிக்கை(n)

**உலகளவிலான இந்திய வங்கியியல்**

- வெளிநாட்டு வாழ் இந்தியர்கள், இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவர்கள் மற்றும் வெளிநாட்டிலுள்ள இந்திய மாணவர்கள் ஆகியோரின் எதிர்காலத் தேவைகளைச் சமாளிக்கச் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வெளிநாட்டு வாழ் இந்தியர்களின் சேமிப்பு வங்கி கணக்குகள் வடிவமைக்கப்பட்டது
- குறிப்பிட்ட தேவைகளுக்காக வெளிநாடுவாழ் இந்தியர் அயலகக் கணக்கு (என்ஆர்இ), வெளிநாடுவாழ் இந்தியர் சாதாரணக் (என்ஆர்ஓ) கணக்குகள் இந்திய ரூபாயில் பராமரிக்கப்பட்டால் துவங்கலாம். வெளிநாட்டில் இருந்து வங்கிக்கணக்கிற்குள் அனுப்பப்பட்ட பணம் / காசோலைகள் / டெபிட்/எடிஎம் அட்டை/இணையதள வங்கியியல் மூலமாகப் பணத்தை வைப்பிடவும்/திரும்பப்பெறவும் முடியும்
- என்ஆர்இ வைப்புக் கணக்குகள் வெளிநாட்டு வங்கிகள் மூலமாக இந்தியாவில் செலுத்தப்படும் தொகையில் துவங்கலாம். இது வெளிநாட்டிலிருந்து செலுத்தப்படும் தொகையாதலால் வேறு என்ஆர்இ கணக்கு அல்லது எப்சிஎன்ஆர்(பீ) கணக்கிலிருந்து மாற்றலாம். என்ஆர்இ கணக்கிலிருந்து உள்ளூரில் செலுத்தும் வசதி உண்டு
- நம்பகத்தன்மையுள்ள உள்ளூர் பரிவர்த்தனைகள் மூலமாகப் பெறப்படும் நிதியை சேகரிக்க என்ஆர்ஓ வைப்புக் கணக்குகள் தொடங்கலாம். என்ஆர்ஓ வைப்பு கணக்கின் முதல் வெளிநாட்டிலிருந்து செலுத்தப்படும் தொகை இல்லாததால், ஆண்டுக்கு ஒரு மில்லியன் யுஎஸ் டாலருக்கு ஈட்டப்படும் தற்போதைய வருமானம் மற்றும் வட்டி விகிதம் வெளிநாட்டிலிருந்து செலுத்தப்படும் தொகையாகவும் ஆர்பிஐ விதிமுறையின் படியும் செயல்படவேண்டும்

- என்ஆர்இ / என்ஆர்ஓ வைப்பு வட்டி விகிதங்கள் கிளைகள் மற்றும் வங்கியின் இணையதளத்தில் தெரிவிக்கப்படுகிறது
- 1 செப்டம்பர் 2017 முதல், பின்வரும் வட்டி விகிதங்கள் தினசரி இறுதி கணக்கு இருப்பில் கணக்கிடப்பட்ட, காலாண்டுதோறும் வரவு வைக்கப்படும். குறைந்தபட்ச இருப்பு: 1/-ன் மடங்குகளில் செலுத்த வேண்டும்.

| சேமிப்பு இருப்புகள் | வட்டி விகிதங்கள் அமல் தேதி 1 செப் 17 |
|---|---|
| ரூபாய் 1 லட்சத்திற்கும் குறைவு | ஆண்டுக்கு 5% |
| 1 லட்சம் முதல் 1 கோடியை விடக் குறைவு | ஆண்டுக்கு 6% |
| 1 கோடி மற்றும் அதற்கும் அதிகம் | ஆண்டுக்கு 6.25% |

இந்திய ரூபாய் 100 கோடிக்கும் அதிகமான தொகைகளுக்கு கிளையை அல்லது உங்களுக்கு உரிய ரிலேஷன்ஷிப் மேனேஜரைத் தொடர்பு கொள்ளுங்கள். விகிதங்கள் யெஸ் பேங்கின் சுய தீர்மானத்தின்படி மாறுதலுக்கு உட்பட்டவை. நிபந்தனைகளுக்கு உட்பட்டவை.

- துவக்கப்பட்டுத் தொடர்ச்சியாக இரண்டாண்டுகள் பரிவர்த்தனை நடைபெற்ற எந்த கணக்கும் செயலற்ற கணக்காகக் கருதப்படமாட்டாது
  கணக்குதாரர் குறைந்த சராசரி மாதாந்திர/காலாண்டு இருப்புத்தொகையாக ஒவ்வொரு காலகட்டத்திற்கும் வங்கி அட்டவணை குறிப்பிடும் தொகையை வைத்திருக்க வேண்டும். இல்லையெனில் சேவை தொகை வசூலிக்கப்படும்
  1. **காலாண்டு இருப்புத்தொகை (எக்யுபி)** கணக்கிடும் முறை - சராசரி கடைசி நாள் (இஒடி) கணக்கில் குறிப்பிட்ட நிதி காலாண்டில் இருக்கும் இருப்புத்தொகை (ஏப்-ஜூன், ஜுலை-செப், அக்-டிச, ஜன்-மார்ச்) உம். (நாள் இறுதி இருப்புத்தொகை நாள் 1+ நாள் இறுதி இருப்புத்தொகை நாள் 2…...) நிதிகாலாண்டின் மொத்த நாட்களின் எண்ணிக்கை
  2. **மாதாந்திர இருப்புத்தொகை (எஎம்பி)** கணக்கிடும் முறை - சராசரி கடைசி நாள்(இஒடி) கணக்கில் குறிப்பிட்ட மாதத்தில் இருக்கும் இருப்புத்தொகையும் (நாள் இறுதி இருப்புத்தொகை நாள் 1+ நாள் இறுதி இருப்புத்தொகை நாள் 2…...) மாதத்தின் மொத்த நாட்களின் எண்ணிக்கை

**கால வைப்புக் கணக்குகள்**

- வங்கி ஊழியர்கள் தேவைக்கு ஏற்றால் போல் வெவ்வேறு திட்டங்களில் முதலீடு செய்ய உதவவும், தகவல்கள் தரவும் ஆவலாக உள்ளனர்
- கால வைப்புக் கணக்குகளை தனிநபர்கள், உரிமைத்துவ நிறுவனங்கள், தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள், ஹெச்யுஎப்கள், குறிப்பிட்ட அமைப்புகள் துவங்கலாம்
- மூத்த குடிமக்களுக்குச் சில கால வைப்புகள் அதிக வட்டி விகிதத்தைத் தருகின்றன
- மூப்பு காலத்திற்கு முன் பணம் எடுப்பது அனுமதிக்கப்பட்டாலும் குறிப்பிட்ட காலத்தில் வட்டி விகிதம் அல்லது மொத்த கால விகிதம் எது குறைவோ அதுவே தரப்படும். வங்கியில் ஏழு நாட்களுக்குட்பட்ட வைப்புப் பணத்தை எடுத்துவிட்டால் வட்டி எதுவும் கிடைக்காது
- கால வைப்புகள் கோரிக்கையின் பேரில் வங்கியால் புதுப்பிக்கப்பட்டு, அவ்வப்போது வங்கியால் நிர்வகிக்கப்படும் வட்டி விகிதத்தின் படி அதற்கு வட்டி வழங்கப்படும். குறிப்பிட்ட அறிவுரை பெறப்படாத போது, ரூ 1 கோடிக்கும் குறைவான தொகைகள் ஏற்கனவே உள்ள காலத்திற்குப் புதுப்பிக்கப்படும் அல்லது முதிர்வின் போது உள்ள பொருத்தமான வட்டி விகிதங்களின் படி புதுப்பிக்கப்படும்
- வட்டி விகிதம் வருடத்திற்கு எனக் கணக்கிட்டு, வருடத்திற்கு உள்ள நாட்களைக் கணக்கிட்டு (வருடம்-366 நாட்கள்) வழங்கப்படும்
- வைப்புகள் மீதான வட்டி காலாண்டிலோ, தொடர் காலாண்டிலோ (அதாவது மறு முதலீட்டின் வட்டியுடன்) செலுத்தப்படும் அல்லது மாதாந்திரம் தள்ளுபடியில் அல்லது வைப்புதாரர் விருப்பத்தில் செலுத்தப்படும்
- ஒவ்வொரு காலகட்டத்திலும், வட்டி விகிதம் கிளைகள் மற்றும் வங்கியின்" இணையதளத்தில் மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது
- மாற்றப்பட்ட வட்டி விகிதம் புதுப்பிக்கப்படும் மற்றும் புதிய வைப்புதாரர்களுக்கே பொருந்தும் மற்றவருக்குத் தற்போதுள்ள வட்டி விகிதம் வழங்கப்படும்
- வைப்புகள் மீதான வட்டி ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு வைப்பு தாரருக்கும் மூல வரிப் பிடிப்பிற்கு (டிடிஎஸ்) வருமான வரி அதிகாரிகள் வகுத்த வரிக்கு உட்பட்டது

- வைப்புதாரர், வரிப் பிடிப்பின்றி வைப்புகள் மீதான வட்டி பெற நிதியாண்டு துவக்கத்தில் படிவம் எண் 15 H/Gஐ சமர்ப்பிக்கவேண்டும்
- பிடிக்கப்பட்ட வரிக்கு மூல வரிப் பிடிப்புச் சான்றிதழ், வங்கியளிக்கும்
- ஸ்வீப்-இன் என்பது சேமிப்பு கணக்குகள்/ நடப்புக் கணக்குகளைக் கால வைப்புக் கணக்குடன் இணைக்கும் வசதி. ஒருவேளை போதிய இருப்புத் தொகை இல்லாவிட்டால் இணைக்கப்பட்ட கால அளவு வாய்ப்பு மூப்புக் காலத்திற்கு முந்தைய அடிப்படையில் முறிந்து விடும் கடைசியாக உள் நுழைந்தது முதலில் வெளியேறியது (ஸ்வீப்-இன் அமைத்தல்) பிறகு தேவையான தொகை சேமிப்பு/நடப்புக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டு விடும்.
- காலமுறை வைப்புத்தொகைகளுக்கு எதிராக ஒரு குறிப்பிட்ட அளவுக்கு கடன் பெற அனுமதிக்கப்படுகிறது மற்றும் இது வரையறுக்கப்பட்ட விகிதங்களில் வட்டியை விதிப்பதன் மூலம் ஒப்புதலளித்து வழங்கப்படுகிறது
- கூட்டு பெயர்களிலுள்ள கால அளவு வைப்புகள் –
    - மூப்புக் காலத்திற்கு முன் திரும்பப் பெறும் கால அளவு வைப்புதாரர்கள் அனைவரும் கையெழுத்திட்டபின் ஒரு முறை அனுமதிக்கப்படும். மேலே கூறியுள்ள முறையின் படி மட்டுமல்லாமல், “இருவரில் ஒருவர் அல்லது உயிரோடிருப்பவர்” அல்லது “முந்தையவர் அல்லது உயிரோடிருப்பவர்” ஆணையைக் கால வைப்பு/நிரந்தர வைப்புடன் வாடிக்கையாளர் வழங்கும் போது, இணை வைப்புதாரர்கள் இது தொடர்பாக இணை ஆணையை வழங்கி இருந்தால், வங்கியானது ஒரு இணை உரிமையாளர் இறக்கும் போது மற்றொருவர் கால/நிரந்தர வைப்பை முன்கூட்டியே முடித்துக்கொள்ளும் வாய்ப்பைத் தருகிறது
    - கால வைப்பின் மீது கடன் கோரப்பட்டால்; இணை வைப்புதாரர்கள் அனைவரும் கடன் விண்ணப்பத்தில் கையொப்பமிட வேண்டும்
- வாடிக்கையாளர் முன்கூட்டியே வைப்புத் தொகையை திரும்பப்பெற்றுக்கொண்டால், வைப்புத் தேதியில் நிலவும் வட்டி விகிதத்தின் படி, வைப்புத்தொகைக்கான காலக்கட்டத்திற்கு, வட்டியை வங்கி செலுத்தும். பதிவு செய்ததில் இருந்து 7 நாட்களுக்குள் உள்ளூர் & வெளிநாடுவாழ் இந்தியர் சாதாரணக் கணக்கு வைப்புத் தொகைகள் திரும்ப எடுக்கப்பட்டால், அதற்கு வட்டி எதுவும் வழங்கப்படமாட்டாது. பதிவு செய்ததில் இருந்து 1 ஆண்டுக்குள் வெளிநாடுவாழ் இந்தியர் அயலகக் கணக்கு /எப்சிஎன்ஆர் வைப்புத் தொலையானது முதிர்வடையும் முன் திரும்ப எடுக்கப்பட்டால், அந்த வெளிநாடுவாழ் இந்தியர் அயலகக் கணக்கு/எப்சிஎன்ஆர் வைப்புத் தொகைக்கு வட்டி எதுவும் வழங்கப்படமாட்டாது. எப்சிஎன்ஆர் (பி) வைப்புத் தொகைகளுக்கு ஆண்டின் அடிப்படையில் வட்டி விகிதம் குறிப்பிடப்பட்டிருக்கும், லீப் ஆண்டைக் கவனத்தில் கொள்ளாமல் 360 நாட்கள் அடிப்படையில் அதற்கு வட்டி வழங்கப்படும்

## உங்கள் வாடிக்கையாளரை அறிந்துக் கொள்ளுங்கள் (கேஒய்சி) விதிமுறைகள்

- ஆர்பிஐ விதிமுறைகள் படி வங்கியில் ‘உங்கள் வாடிக்கையாளரை அறிந்துக் கொள்ளுங்கள் கொள்கை (கேஒய்சி)’ உள்ளது.
- அறிந்தோ, அறியாமலோ சமூக விரோத சக்திகள் பணம் கையாடுவதை, தீவிரவாத பணிகளுக்குப் பணம் வருவதை தடுக்க, வங்கியின் பயனை, பெயரை தவறாகக் கையாள்வதைத் தடுக்கக் கேஒய்சி தத்துவம் உருவானது. இந்தக் கொள்கையின் நோக்கம் வங்கி தனது வாடிக்கையாளர்களையும் அவர்களின் நிதியியல் செயல்தொடர்புகளையும் அறிந்துக் கொள்ள / புரிந்துக்கொள்ள உதவ வேண்டும் என்பதும் ஆகும். இதன் மூலம், வங்கி தனது இடர்களை மதிநுட்பத்துடன் திறம்பட சமாளிக்க உதவும்.
- நேர்த்தியான கேஒய்சி செயல்முறை மற்றும் உள் கண்காணிப்பின் மூலம் வங்கி கணக்கு துவங்கும், குறிப்பிட்ட முக்கியப் பரிவர்த்தனை செய்யும் வாடிக்கையாளர்களின் உண்மையான அடையாளத்தை அறியமுடிகிறது.
- கணக்கு துவங்கும் போது, வாடிக்கையளரின் அடையாளம், முகவரி, கையெழுத்து ஆகியவை சரிபார்க்க அதற்குறிய ஆவணங்களைப் பெறுகிறது
- வாடிக்கையளரிடம் பெறப்படும் சுட்டிக்காட்டும் அடையாள ஆவணங்கள்
    - சட்டரீதியிலான அடையாளத்தை நிரூபிக்கப் பாஸ்போர்ட்/ஆதார் கார்டு/பான்கார்ட்/வாக்காளர் அடையாள அட்டை/ஓட்டுனர் உரிமம் போன்றவை
    - முகவரி தகவல்களைச் சரிபார்க்க - தொலைபேசி கட்டணச்சீட்டு/வங்கி கணக்கு அறிக்கை/மின்சாரக் ல்கட்டணச்சீட்டு/பாஸ்போர்ட்/பான்கார்ட/குடும்ப அட்டை முதலியவை
    - கையெழுத்துச் சாட்சியாக - சட்டப்படி செல்லக்கூடிய பாஸ்போர்ட/பான்கார்ட்/ஓட்டுனர் உரிமம் போன்றவை

தனிநபரிடம் மேற்கூறிய ஆவணங்களுடன் அவரின் புகைப்படமும் பெறப்படுகிறது

- வங்கி அவ்வப்போது வாடிக்கையாளர்களின் பரிவர்த்தனைகளைக் கண்காணித்து இடரை குறைத்து முறையான மற்றும் வழக்கமான செயல் தாண்டிய பாதுகாப்பற்ற பரிவர்த்தனைகளை அடையாளம் காணுகிறது

**நிதியியல் உள்ளடக்கல்**

- அதிக நிதியியல் உள்ளடக்கலை அடைய வங்கி, காசோலைகள், டெபிட்-எடிஎம் அட்டை, ,இணையதள வங்கியியல், குறுஞ்செய்தி, மின்னஞ்சல் விழிப்பூட்டல்களுடன் குறைந்தளவு இருப்புத்தொகை இல்லாமல் சுருக்கமில்லா வங்கி கணக்குகள் வைத்திருக்கும் வசதியளிக்கிறது
- இதன் வழிநடத்தும் குறிக்கோளே எந்த வாடிக்கையாளர்க்கும் அவர்கள் (ஆணோ/பெண்ணோ) விலாச, அடையாள ஆதார ஆவண அத்தாட்சிகள் அளிக்க இயலாததால் அவர்கள் சேவை பெற மறுப்பு கூடாது என்பதை உறுதிப்படுத்தவே ஆகும்.
- கணக்குகள் தொடங்க, கணக்குகள் தொடங்கும் ஆவணச் சமர்ப்பித்தலில் விலக்குகள் தரப்பட்டிருக்கிறது. கணக்கிலுள்ள மொத்த இருப்புத்தொகை கடன்கள் ஆகியனவற்றுக்கு அதிகபட்ச வரம்பு தரப்பட்டுள்ளது
- வங்கி கேஒய்சி ஆவண சமர்ப்பித்தல் மற்றும் கட்டண அட்டவணையில் குறிப்பிட்டபடி, சேமிப்பு கணக்கிற்குத் தேவையான குறைந்த சராசரி காலாண்டு இருப்புத்தொகை ஆகியவற்றில் விலக்குகள் அளிப்பது மட்டுமல்லாமல் குறைந்த ஊதிய வாடிக்கையாளர்களின் நிதி சுமையை அகற்ற அவர்களின் புகைப்படம் மற்றும் கேஒய்சி ஆவண ஒளிநகல்/நுண்நகல் செலவுகளை வங்கி ஏற்கிறது

**நியமன வசதி**

- தனி நபர் அளவில் துவங்கப்பட்ட கணக்குகளுக்கு (அதாவது தனி/கூட்டுக் கணக்குகள் மற்றும் தனி உரிமைத்துவ நிறுவனங்கள் கணக்குகள்) நியமன வசதி உண்டு. அலுவல் பிரதிநிதித்துவ தகுதியில் துவங்கிய கணக்குகளுக்கு நியமன வசதியில்லை
- ஒரு நபரின் பெயரிலே மட்டும் தான் நியமன வசதி அளிக்கமுடியும்
- கணக்குதாரர் எப்போது வேண்டுமானாலும் அவரின் (ஆணோ/பெண்ணோ) ஆயுட்காலத்தில் நியமனம் செய்யவோ, நீக்கவோ, மாற்றவோ முடியும். நியமனம் செய்ய, நீக்க மாற்றும் போது சாட்சி தேவை, மேலும் வேண்டுகோளில் அனைத்து கணக்குதாரர்களும் கையப்பமிட்டிருக்க வேண்டும்
- நியமிக்கப்பட்டவர் சிறாராக இருந்தால், வைப்புதாரர்(கள்) நியமிக்கப்பட்டவர் சிறாராக இருக்கும் போது அவர் இறக்க நேரிட்டால், வைப்புதொகை வழங்க வேறொருவரை நியமிக்கலாம்
- நடைமுறையில் இருக்கும் கணக்குகளுக்கு நியமனம் இல்லாத பட்சத்தில் கணக்குதாரர் கிளைகளில் கிடைக்கும் நியமன விண்ணபத்தைப் பூர்த்திச் செய்து நியமன வசதி பெறலாம்

மேற்கூறிய வசதிகள், ஒருவேளை வைப்புதாரர் இறக்க நேரிட்டால், விரைவாக உரிமை கணக்குளை இலகுவாக தீர்க்கவும் வைப்புதாரர் குடும்பத்திற்கு ஏற்படும் சிரமத்தை குறைக்கவும் ஏற்படுத்தப்பட்டது. அனைத்து வாடிக்கையாளர்களும் (புதிய மற்றும் ஏற்கனவே உள்ள) நியமன வசதி இல்லாத பட்சத்தில் நியமனவசதியை பயன்படுத்திக்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர்

## நிலை அறிவுறுத்தல்கள் மற்றும் தன்னியக்க தீர்வக சேவைகள்

- ஒரே வங்கியில் பராமரிக்கப்படும், ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு முன்னரே குறிப்பிடப்பட் கால, தேதியில் குறிப்பிட்டளவு தொகையை மாற்றம் செய்ய நிலை அறிவுறுத்தல்கள் வங்கிக்குத் தரலாம்
- முன்னரே முடிவு செய்த கால, தேதியில் ஒரே வங்கியில் பராமரிக்கப்படும ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்குகிற்கு நிதிகளை மாற்றீடு செய்தல் / அனுப்புதல் தன்னியக்க தீர்வகம் (எசிஎச்) வங்கிக்கு தரலாம். இவ்வசதி நிறுவனங்களுக்குச் செலுத்துதல் சேவைகளான ஆதாயப் பங்கு வழங்கல், வட்டி, ஊதியம், ஒய்வுதியம் வழங்கவோ அல்லது முக்கிய நிறுவனங்களுக்குத் தொலைபேசி, மின்சாரக் கட்டணம் வரி, வீட்டு வரி, தண்ணிர் வரி மற்றவை ஆகியவற்றுக்குப் பணம் செலுத்தவோ பயன்படுத்தலாம் அல்லது நிதி நிறுவனங்களுக்கு, வங்கிகளுக்குக் கடன் தவணை செலுத்தவோ, மக்களின் வழக்கமான முதலீடுகளுக்கோ பயன்படுத்தலாம்

**பணம் அனுப்பும் சேவைகள்**

- வாடிக்கையாளர்கள் ஒரு மையத்திலிருந்து வேறு மையத்திற்கு பேயபிள் அட் பார் (மல்டிசிட்டி) காசோலைகள் மூலம் பணம் அனுப்பலாம்

- விரைவான வசூல்களுக்கு அனைத்து யெஸ் பேங்க் கிளை மையங்களிலும் உள்ள உள்ளூர் தீர்வகத்தில் பேயபிள் அட் பார் (மல்டிசிட்டி) காசோலைகளை வைப்பிடலாம்.
- 950 மையங்களில் கேட்பு வரைவோலைகளை செலுத்தும் வசதி உண்டு
- கணக்குகளுக்கு தேசிய மின்னணுமுறை நிதிகள் மாற்றீடு (என்இஎ்ப்டி) பணம் செலுத்தல்கள் 15,000 மையங்களில் 90,000 வங்கி கிளைகளில் உண்டு
- நிகழ்நேர பெருந்திரள் தீர்வு (ஆர்டிஜிஎஸ்) செலுத்தல்கள் 15,000 மையங்களில் 90,000 வங்கி கிளைகளில் உண்டு
- வங்கியிடைப் பணமாற்றீடு மூலம் பணம் செலுத்தும் வசதி இந்தியாவிற்கு உள்ளேயும், இந்தியாவிற்கு வெளியேயும், தற்போது 15 வெவ்வேறு நாடுகளில் உண்டு
- கல்வி நிறுவனங்கள், அரசாங்க அமைப்பு, நிரந்தர அமைப்புகள், விசா விண்ணப்பங்கள் போன்றவற்றுக்காகப் பணம் செலுத்துவதனால் வாடிக்கையாளர் அல்லாதோர் சமர்ப்பிக்கும் 50,000 ரூபாய்க்கு குறைவான கேட்பு வரைவோலைகள் வங்கி வழங்கும்

**கேட்பு வரைவோலைகளை / பணம் செலுத்தல் ஆணைகளை வழங்கல்**

- வங்கி போதுமான ஈட்டுறுதி அடிப்படையிலும் பணம் செலுத்தாத அறிவிப்பைப் பெறாமலும் ரூ. 5,000/- வரையிலும் நகல் கேட்பு வரைவோலையை வழங்கலாம்

- வங்கியானது கோரிக்கையை பெற்றதில் இருந்து பதினைந்து நாட்களுக்குள்ளாக வாடிக்கையாளருக்கு நகல் கேட்பு வரைவோலையை வழங்க வேண்டும். இல்லையெனில் காலத் தாமத்திற்குக் காப்பீடு கொள்கையின் படி வாடிக்கையாளருக்கு ஏற்பட்ட தாமதத்திற்கு வங்கி வட்டி தர வேண்டும்

**காசோலை சேகரிப்பு சேவைகள்**

யெஸ் பேங் உறுதிசெய்யப்பட்ட காசோலை சேகரிப்பு கொள்கையைக் கொண்டுள்ளது அதனை வங்கி இணையதளம், வங்கி அறிவிப்பு பலகைகளிலும் தெரியப்படுத்தியுள்ளோம். தற்போதுள்ள காசோலை சேகரிப்புக் கொள்கையை மேலும் தகவல்களுக்குக் கண்டறிந்து கொள்ளலாம். காசோலை சேகரிப்புக் கொள்கையில் இருந்து எடுக்கப்பட்ட சில பகுதிகள் இவை

- கீழ்கண்டவை கணக்கில் வைப்பு செய்யப்படும் காசோலையின் காலக்கெடுக்கள் ஆகும்

| | காசோலை வகை | நிதிஇருப்பு | பரிவத்தனை முறை | குறிப்புரைகள் |
|---|---|---|---|---|
| A | உள்ளூர் காசோலை - எம்ஜசிஆர் தீர்வகம்/ எம்ஜசிஆர் அல்லாத தீர்வகம் | மாற்றீடு காசோலைக்கு (TRF) அதே நாளில் வரவு / உள்ளூர் காசோலைக்கு (LCC) அடுத்த நாளில் வரவு வைக்கப்படும் வகையில் வாடிக்கையாளருக்கு, அந்த நகரத்தில் காசோலைகளுக்கு தீர்வகக் காலக்கெடுக்கள் படி நிதி திரும்ப எடுப்பதற்குக் கிடைக்கும் | தீர்வகம் | உள்ளூர் தீர்வக விதிகளின் படி, உள்ளூர் தீர்வக பகுதியில் அளிக்கும் வங்கியும், பெறும் வங்கியும் இருக்க வேண்டும். |
| B | வெளியூர் காசோலை - பெருநகரங்களில் வைப்பு செய்யப்பட்டு வேறொரு பெரு நகரத்தில் செலுத்தப்படுவது (டெல்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா) | 7 பணி நாட்கள் | சேகரிப்பு அடிப்படை | |
| C | வெளியூர் காசோலை - பெருநகரங்களைத் தவிர மற்ற யெஸ் பேங்க் கிளை மையங்களில் செலுத்தப்படுவது | 10 பணி நாட்கள் | சேகரிப்பு அடிப்படை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெளியூர் காசோலை - பெருநகரங்களில் மற்றும் மாநில தலைநகரங்களில் செலுத்தப்படுவது (வட கிழக்கு மாநிலங்கள், சிக்கிம் தவிர) | 10 பணி நாட்கள் | சேகரிப்பு அடிப்படை | |
| D | வெளியூர் காசோலை - யெஸ் பேங்க் கிளைகள் அல்லாத இடங்களில் செலுத்தப்படுவது | 14 பணி நாட்கள் | சேகரிப்பு அடிப்படை | |

**நிபந்தனைகள்:**

- கடன் காலக்கெடுக்கள் நிதி மேலாண்மை ஏற்பாடுகளின் படி மாறும். அதுவே ஒப்புக்கொண்ட ஏற்பாட்டின்படி அமையும்
- வங்கி வளாகத்துக்குள், வங்கியில் பணம் செலுத்தும் இடம் மற்றும் சேகரிப்பு பெட்டிகளில், குறிப்பிட்ட வெட்டுநிலை நேரத்திற்குள் வங்கி வளாகத்துக்குள் அளிக்கும் எல்லா உள்ளூர் காசோலைகளுக்கும் அந்த நாளே பணமளிக்கப்படும்
- குறிப்பிடப்பட்ட வெட்டுநிலை நேரம் தாண்டி வைப்புச் செய்யப்பட்ட காசோலைகளுக்கும், வங்கி வளாகம் தாண்டி வெளி ஏடிஎம் இடங்களையும் சேர்த்து சேகரிப்பு பெட்டிகளில் வைப்பு செய்யப்பட்ட காசோலைகளுக்கும் அடுத்தச் சுழற்சியில் பணமளிக்கப்படும்
- ஒவ்வொரு கிளையிலும் குறிப்பிடப்பட்ட வெட்டுநிலை நேரம் தீர்வக நேரத்திற்கு வழக்கமாக இரண்டு மணிநேரத்திற்கு முன்னராகும். இந்தத் தகவல் அனைத்து கிளைகளிலும் தெரியப்படுத்தப்படும்
- வெளியூர் காசோலைகள் (யெஸ்பேங்க் நிறுவனத்திற்கு தீர்வக சேவைகள் இல்லாத மையங்களில்) சேகரிப்பு முறைக்கு அனுப்பப்படும்
- வாடிக்கையாளர்கள் எடுப்பதற்குப் போதுமான கையிருப்பு இருந்தால், வெவ்வேறு மையங்களில் திரும்பவரும் தீர்வகக் காலக்கெடுக்களைப் பொறுத்து நிதி சேகரிப்பு கிடைத்தவுடன் இருக்கும் தொகையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேற்கூறிய வழிகாட்டுநெறிகள் யெஸ் பேங்கின் நடப்பில் உள்ள காசோலை சேகரிப்பு கொள்கையின்படியானதாகும். இந்த கொள்கை ஒவ்வொரு காலகட்டத்திலும் மாற்றங்களுக்கு உட்பபட்டது, ஆதலால் தங்களைத் தற்போதைய சேகரிப்பு கொள்கையை வங்கி இணையதளத்தில் பார்க்குமாறு அறிவுறுத்துகிறோம்.

**உடனடி வரவு வசதி**

உடனடி காசோலை சேகரிப்பில் எங்கள் கொள்கையை பற்றி மேலும் தகவல்கள் அறிய காசோலை சேகரிப்பு கொள்கையைத் தயவு செய்து காணவும். யெஸ் பேங்கின் காசோலை சேகரிப்பு கொள்கையை வங்கி இணையதளத்தில் கிடைக்கிறது, வங்கி அறிவிப்பு பலகைகளிலும் தெரியப்படுத்தியுள்ளோம்.

**அழுக்கான / சற்று சிதைந்த ரூபாய் தாள்களை மாற்றுவது**

அனைத்து வங்கி கிளைகளிலும், நம்பகத்தன்மையுள்ள சற்றே சிதைந்த மற்றும் அழுக்கான ரூபாய் தாள்களை மாற்றலாம். சிதைவு சந்தேகத்திற்கிடமானதாகவோ அல்லது முறையற்றதாகவோ இருக்கக் கூடாது எல்லா இலக்கங்களிலும் உள்ள சிதைந்த ரூபாய் தாள்களின் நிலை குறித்து இந்திய ரிசர்வ் வங்கி வழிகாட்டுநெறிகளின்படி வங்கி செயல்படும்

## பாதுகாப்பான வங்கி அனுபவத்திற்கு வாடிக்கையாளர் பின்பற்ற வேண்டிய நல்ல பயிற்சிகள்

- காசோலை புத்தகம்/வங்கிக் கணக்குப் புத்தகம் பத்திரமாக வைத்திருக்க உறுதி செய்ய வேண்டும்
- காசோலையில் எழுதும் போது பின்புறம் கார்பன் உபயோகப்படுத்துவது சிறந்தது
- முடிந்தவரை கீறிய மற்றும் எழுதப்பட்ட பெயருடைய கணக்குதாரரே தொகையைப் பெறுநர் காசோலைகள் கொடுக்கவும்
- காசோலை தகவல்களான பெயர், தேதி, தொகை எழுத்து மற்றும் எண்களில், கீறியது முதலியவற்றை சரிபார்த்து வழங்க வேண்டும். முடிந்த வரையில் அருகேயுள்ள முழுமையான இலக்க ரூபாய் தொகையாகக் காசோலை தரலாம்.
- கணக்கு வகைக்குத் தகுந்தவாறு சராசரி குறைந்த இருப்புத்தொகையை பராமரிக்க வேண்டும்

- கணக்கில் போதிய பணம் இல்லாமல் காசோலை வழங்க கூடாது, அவ்வாறு வழங்குவது செலாவணி முறிச் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்
- நிலை அறிவுறுத்தல்கள், மின்னணு தீர்வக சேவைகளை ஈடுசெய்யக் கெடு தேதியில் கணக்கில் போதிய பணம் வைத்திருக்க உறுதி செய்ய வேண்டும்
- காசோலை அல்லது வேறு நிதி ஆவணங்களை பதிவுத்தபால், கொரியரில் அனுப்ப வேண்டும்
- கணக்குதாரர் இறந்துவிட்டால் நியமன வசதியை பயன்படுத்தி நியமிக்கபட்டவருக்கு உரிமை தொகையளிக்கலாம். வாரிசுரிமைச் சான்றிதழை கேட்காமல் அல்லது உரிமைக்கோரிக்கைகளை சரிபார்காமல் இதை செய்யலாம். இது திட்டத்தை எளிமைப்படுத்துகிறது
- கணக்கு எண், வைப்புத் தொகை தகவல்கள் தனியாகக் குறித்து வைத்திருக்க வேண்டும்
- தங்களின் முகவரி, தொலைபேசி எண் மாறிவிட்டால் உடனடியாக வங்கிக்கு அதற்குத் தகுந்த அத்தாட்சியுடன் தெரிவிக்க வேண்டும்
- டெபிட் - ஏடிஎம் அட்டை, கேட்பு வரைவோலை, காசோலை புத்தகம், காசோலை மற்றும் சில தொலைந்து விட்டால் கிளைக்கு/தொடர்பு மையத்திற்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்
- நிலை அறிவுறுத்தல்கள், பயன்பாட்டுக் கட்டணச்செலுத்தங்கள், எலக்டிரானிக் கிளியரிங் சேவைகளைப் பயன்படுத்தி மறு பரிவர்த்தனை, செலுத்துதலை ஒழுங்குபடுத்த வேண்டும்
- வங்கியின் சேவைகள் பற்றிய கருத்துக்கள், சேவைகளில் உள்ள குறைபாடுகளை வங்கி கிளை அல்லது தகவல் மையத்தின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும்
- எழுதாத காசோலையில் கையெழுத்திடவோ, வங்கிக் கணக்குப் புத்தகம், காசோலை புத்தகம் ஆகியவற்றில் இருபுறமும் கையெழுத்திடவோ கூடாது
- காசோலைகளைக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வங்கி, ஏடிஎம்களில் உள்ள காசோலை சேகரிப்பு பெட்டியில் வைப்புச் செய்ய வேண்டும். வெட்டுநிலை நேரங்கள் எல்லாக் காசோலை சேகரிப்பு பெட்டிகளிலும் தெரிவிக்கப்பட்டிருக்கும்
- டெபிட் - ஏடிஎம் - இணையதள வங்கியியல் PIN ஆகியவற்றை யாரிடமும் தெரியப்படுத்தக்கூடாது, யெஸ் பேங்க் ஊழியர், ஏடிஎம் காவல் பணியிலுள்ள காவலர் ஆகியோரிடம் கூடத் தெரியப்படுத்தக்கூடாது
- தவறாகப் பயன்படுத்தலை தடுக்க அட்டையில் உடனடியாக அழியாத பால்பாயின்ட் பேனா மூலம் கையெழுத்திற்கான இடத்தில் கையெழுத்திட வேண்டும்
- வங்கியில் டெபிட், ஏடிஎம் அட்டைகளைத் திருப்பித் தந்தால், ஒப்படைத்தால் அதிகாரியிடம் தருவதற்கு முன் உடைத்து கொடுப்பதை உறுதி செய்ய வேண்டும்
- இணையதள வங்கியியல் கடவுச் சொல்லின் குறைந்த அளவு 8 எழுத்துக்களாக இருக்க வேண்டும். மற்றவர் எளிதில் அறியாதபடி சிரமமான கடவுச்சொல்லாக இருக்க வேண்டும். மேல், கீழ் எழுத்துக்கள், எண்களைக் கொண்டு கடவுச் சொல் அமைக்க வேண்டும்.
- உங்கள் சொந்த தகவல்களைக் கேட்டு வரும் மின்னஞ்சல்கள் மற்றும் தவறான பொருளடக்கம் கொண்ட 'அறியாத' வலைத்தளங்களை எச்சரிக்கையாக ஒதுக்க வேண்டும். தவறாகப் பயன்படுத்தலை தடுக்கும் சில நல்ல பண்புகள் கீழே தரப்பட்டிருக்கிறது –
    - தாங்களாகவே மின்னஞ்சல்களில் வரும் இணைப்புகளைத் தேர்வு செய்யவோ, பிரவுசரில் யுஆர்எல்ஐ தட்டச்சு செய்யவோ கூடாது
    - சந்தேகத்திற்கிடமான அனுப்புனர் மின்னஞ்சலை அனுப்புனரோடு உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்
    - மின்னஞ்சல்களில் வரும் இணைப்புகளைத் திறக்க வேண்டாம்
    - எல்லாக் கணக்குகளுக்கும் ஒரே கடவுச் சொல்லை தவிர்க்க வேண்டும்
    - கணினியில் சொந்த தகவல்கள், கடவுச்சொல் தகவல்களைக் கோப்புகளில் சேமித்து வைத்திருக்க வேண்டாம்

## செல்வ வள மேலாண்மை சேவைகள்

- உங்கள் நிதி இலக்குகளை அடைய பயனுள்ள தீர்வுகளை வழங்கும் வகையில் ஆராய்ச்சி அடிப்படையில் பலதரப்பட்ட முதலீட்டுத் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை யெஸ் பேங்க் வழங்குகிறது
- இணைந்து முழுமையாகவல்ல **MF ஆன்லைன்** சேவைகள்:
    - தொல்லை இல்லாத, காகித ஆவணப் பயன்பாடற்ற முதலீடு
    - முன்னணி நிதி நிறுவனங்கள் வழங்கும் பரஸ்பர நிதித் திட்டங்களில் பரிவர்த்தனை செய்யலாம்
    - ஒரே ஒரு பட்டன் கிளிக்கில் அணுகலாம், கண்காணிக்கலாம், பரிவர்த்தனை செய்யலாம், எளிதானதுதானே!
- பரிந்துரை சேவைகளின் வழியாக மூன்றாம் தரப்பு போர்ட்போலியோ மேனலானை சேவை (பிஎம்எஸ்) போன்றவற்றில் முதலீடு செய்யும் வாய்ப்புகளையும் யெஸ் பேங்க் வழங்குகிறது

- பாதுகாப்பு, சேமிப்பு மற்றும் முதலீடு, ஓய்வூதிய திட்டமிடல் மற்றும் குழந்தைகள் திட்டம் ஆகியவை தொடர்பான வாடிக்கையாளர்களின் பல்வேறு தேவைகளுக்கு ஏற்ப ஆயுள் காப்பீட்டுத் தீர்வுகளையும் வழங்குகிறது. இந்தத் திட்டங்கள் மேக்ஸ் லைஃப் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மூலம் வழங்கப்படுகிறது
- உடல்நலக் காப்பீடு, வாகனக் காப்பீடு, பயணக் காப்பீடு, வீடு மற்றும் சொத்து காப்பீடு ஆகியவை தொடர்பான வாடிக்கையாளர்களின் பல்வேறு தேவைகளுக்கு ஏற்ப பொதுக் காப்பீட்டுத் தீர்வுகளையும் வழங்குகிறது. இந்தத் திட்டங்கள் பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பேனி லிமிடட் மூலம் வழங்கப்படுகிறது

**வைப்புத்தொகை சேவைகள்**

- யெஸ் பேங்க், தேசிய பாதுகாப்பு வைப்பு குழுமத்தின் (என்எஸ்டிஎல்) ஓர் வைப்பு பங்குதாரர் ஆகும்.
- போர்ட்போலியோ முதலீட்டு திட்டத்தின் கீழ் பங்குகளை வாங்க, வெளிநாடு வாழ் இந்தியர்கள் தனியான கணக்குகளைத் திறக்க வேண்டும்
- எல்லா டிமாட் கணக்கு துவக்கத்திற்கும் பான் அட்டை அவசியம் தேவையாகும்
- டிமாட் கணக்குகளில் குறைந்தளவு இருப்புத்தொகை பராமரிப்பு தேவையில்லை
- தனி நபர் அளவில் துவங்கப்பட்ட கணக்குகளுக்கு (அதாவது தனி/கூட்டுக் கணக்குகள் மற்றும் தனி உரிமைத்துவ நிறுவனங்கள் கணக்குகள்) நியமன வசதி உண்டு. அலுவல் பிரதிநிதித்துவ தகுதியில் துவங்கிய கணக்குகளுக்கு நியமன வசதியில்லை
- முறைபடுத்தப்பட்ட விதிமுறைகள் படி எல்லாத் தனி வாடிக்கையாளர்களும் கண்டிப்பாக நியமன தகவல்களைத் தரவேண்டும், தராவிட்டால் ஏன் நியமன வசதி தர வில்லையெனக் காரணத்தைத் தனியாக விளக்க வேண்டும்
- துவக்கப்பட்டுத் தொடர்ச்சியாக 180 நாட்கள் பரிவர்த்தனை நடைபெற்ற எந்த கணக்கும் செயலற்ற கணக்காகக் கருதப்படமாட்டாது

**சிறு தொழில் கடன் உதவி திட்டங்கள்**

- நம்பகத்தன்மையற்ற சிறு தொழில் கடன்கள் தொழில் முனைவோருக்கு, தொழில் மூலதனம், சொத்து கைப்பற்றுதல் மற்றும் தொழில் தேவைகளைச் சமாளிக்க வங்கியளிக்கிறது
- குறைந்த ஆவணச் சமர்ப்பித்தல், தெளிவான நுழைவு தகுதியுடன் கடன்களைத் தனியார், கூட்டுக் கணக்குகள் உரிமைத்துவ நிறுவனங்கள், நெருக்கமான லிமிடட் நிறுவனங்களுக்கு வங்கியளிக்கிறது
- தொழில் கடன்களின் சிறப்பு அம்சங்கள் அதிகபட்ச கடன்கள் 30 லட்சம் வரை அளிக்கப்படுகிறது; எந்த அத்தாட்சியும், பாதுகாப்பு சாட்சியும் தேவையில்லை; 4-7 நாட்களில் கடன் வழங்கப்படும், வீட்டு வாசலுக்கே எளிதாக வழங்கப்படும் தவணை காலம்; 12-36 மாதங்கள்

**சிஎம்எஸ் மற்றும் செலுத்துதல் தீர்வுகள்**

- தொழில் தேவைகளுக்குச் சேகரிப்பு மற்றும் செலுத்துதல்களை வழக்கப்படுத்திச் சரியான உடனடி தீர்வுகளை வங்கியளிக்கிறது உருவாக்குகிறது. தொடர் பண சேவைகள், குறைந்த வணிக/ கணக்குமுடித்தல் இடர், எளிதான நிர்வாகம் மற்றும் வழக்கப்படுத்தப்பட்ட எம்ஐஎஸ் மூலம் அதிகப் பண எதிர்பார்ப்பு ஆகியவற்றை வங்கி உறுதிப்படுத்துகிறது
- உள்ளூர் சேகரிப்புகளுக்காக, பெறத்தகுந்தவை மேலாண்மை சேவைகள் 1000 தொழில் மையங்களிலும், வெளியூர் காசோலை சேகரிப்பு 2800 மையங்களிலும் வங்கியின் சொந்த அமைப்பின் மூலமாகவும், தொடர்பு வங்கிகள் மூலதாகவும் அளிக்கப்படுகிறது
- பெறத்தகுந்தவை மேலாண்மை சேவைகளின் சிறப்பு அம்சங்கள் - வீட்டு வாசலிலேயே சேகரிப்பு, சேவை அளவு ஒப்பந்தத்தின்படி உறுதியானளவு வரவுகள், பெரியளவில் கொரியர் நிறுவனங்களுடன் வங்கியின் தொடர்பு, மிகப் பெரிய தொடர்பு வங்கி அமைப்பு, நேரடி கணக்கு வரவு வசதி, நிதி குழுமம், வழக்கப்படுத்தப்பட்ட மேலாண்மை தகவல் திட்டம் மற்றும் சில ஆகும்.
- தற்ஆர்டிஜிஎஸ்/என்இஎப்டி/ஐஎம்பிஎஸ் ஆகியவை மூலம் எலக்ட்ரானிக் முறையில் நேரடி கிரெடிட்களைசேவையுறுநர் கணக்குகளில் சரிபார்ப்புகளுடன் அல்லது சரிபார்க்காமல் வரவு வைக்கலாம், திரும்பப்பெறும் ஏபிஐ கருவிகள் போன்றவையும் உள்ளன

- வங்கியின் தொகுக்கப்பட்ட சில முக்கியச் செலுத்தத்தகுந்தவை மேலாண்மை சேவைகள் -
    - கூடுதல் மறைக்குறியீடாக்கத்துடன் பெருந்திரள் பதிவேற்றங்கள் உள்பட மின்னணு முறையில் பணம் செலுத்தல்கள்
    - பெருமளவிலான இடங்களில் சேவை வசதியுடன் ஆன்லைன் RTGS, NEFT, திரைக்காட்சி IMPS வசதியுடைய கார்ப்பரேட் பணம் செலுத்தல் மேடைகள்

- ஆர்டிஜிஎஸ் – 90,000+ 15,000 அமைவிடங்களில் வங்கிக் கிளைகள்
- என்இஎப்டி – 90,000+ 15,000 அமைவிடங்களில் வங்கிக் கிளைகள்
- தொலைநிலை மற்றும் பெருந்திரள் DD அச்சிடுதல் செலுத்தத்தகுந்தவை மேலாண்மை சேவைகளின் சிறப்பு அம்சங்களாவன - தனிப்பயனாக்கப்பட்ட ERP ஒருங்கிணைப்பு; பல நிலை அதிகாரமளிப்பு தகவல் அமைவுரு ; தன்னியக்க மின்னஞ்சல் அறிவுரை; தரவு மறைக்குறியீடாக்கம்; இணை பிராண்டட்டு காசோலை அச்சிடுதல்; முதலியவை.
- சேவையுறுநர் தள காசோலை அச்சிடல்.

## மூலதன சந்தைகள் மற்றும் எஸ்க்ரோ கணக்குச் சேவைகள்

- சம பங்கில் இருந்து/கடன் சந்தையில் இருந்து மூலதனத்தை பெருக்கும் செயல்பாடுகளை மேற்கொள்ளும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் வட்டி பற்றாணையின்/இலாபப்பங்கு பற்றாணையின் விநியோகத்தை நிர்வகிப்பதற்கும் பரிவர்த்தனை சார்ந்த செயல்வல்லமைகளை வழங்குகிறது
- வட்டி / இலாபப்பங்கு பேஅவுட் சேவைகளின் சிறப்பு அம்சங்களாவன - பற்றாணைகள் சேவை அளவு ஒப்பந்தத்தில் ஏற்கனவே ஒப்புக்கொண்ட அனைத்து இடங்களிலும் சமமாக மதிப்புரிமை அளிக்கப்படுகின்றன
  பற்றாணைகள் மீதான செலுத்தப்பட்ட / செலுத்தப்படாத நிகழ்நிலை அறிக்கை; பணம் செலுத்தல் நிறுத்தம் வசதி; காலமுறை சமரசங்களை வழங்கும் ஒருங்கிணைந்த உள்மைய மேடை செயல்படுத்தல் திறன் முதலியவை.
- யெஸ் பேங்க் SEBI-யுடன் பதிவுசெய்யப்பட்ட, வழங்குவதற்கு உரிமம் பெற்ற வங்கியர் ஆக இருப்பதால் முதல் பொதுப்பங்கு வெளியீடு (IPO) தொடர்பான எஸ்கிரோ சேகரிக்கும் வங்கிச் சேவைகளையும் திருப்பிக்கொடுத்தல் வங்கிச் சேவைகளையும் வழங்குகிறது, தொடர் பொதுப்பங்கு வெளியீடு (FPO), உரிமைப் பங்கு வெளியீடு & கண்காணிப்பு முகமை சேவைகள். மேலும், யெஸ் பேங்க் சம பங்குக்கு/கடனுக்கு பங்கொப்பத்திற்காக தனது இயக்கம் சார்ந்த அனைத்து கிளைகளிலும் ASBA சேவைகளை வழங்குகிறது
- எஸ்க்ரோ சேகரிக்கும் வங்கிச் சேவைகள் மற்றும் திருப்பிக்கொடுத்தல் வங்கிச் சேவைகளின் சிறப்பு அம்சங்கள் - IPO செயல்படுத்தலுக்காக இந்தியா முழுவதும் 143 உத்திப்பூர்வ தொழில் மையங்களில் சேவை வசதி, காலமுறை சமரசங்கள், அனைத்து திருப்பிக்கொடுத்தல்களுக்கும் ஆன்லைனில் பொருந்தச்செய்தல்; NEFT, RTGS மூலமாக இணையதளத்தில் பெருந்திரள் திருப்பிக்கொடுத்தல்களை நிர்வகிப்பதற்கான திறன்; முதலியவை
- யெஸ் பேங்க் டீலிஸ்ட், ஓப்பன் ஆபர் (தற்போதுள்ள பங்குதாரர்களுக்கான திறந்தநிலை பங்கு வெளியீடு), பைபேக்குகள், பங்கு வாங்குதல், திட்டப்பணி நிதியுதவி, அறக்கட்டளை மற்றும் தக்கவைப்புக் கணக்குகள், ஒழுங்குமுறை விதிகளுக்கு ஏற்ப நோடல் கணக்குகள் போன்ற பலதரப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப அட்வைசரி மற்றும் எஸ்க்ரோ மேலாண்மை சேவைகளையும் வழங்குகிறது
- பங்குப் பரிவர்த்தனை மையங்களில் வர்த்தகம் செய்யும் உறுப்பினர்களுக்காகச் செட்டில்மென்ட் பேங்கிங்/ கிளியரிங் பேங்க் சேவைகள் வழங்குவதற்குப் பல மேஜர் பங்குப் பரிவர்த்தனை மையங்களில் வங்கி பதிவுசெய்துள்ளது
- யெஸ் பேங்க் வணிகத்துறை சார்ந்த ஆவணங்களுக்காக ஏஜென்ட் தேவைகளுக்கு ஏற்ப அறிவுரைகளை வழங்கும் மற்றும் பணம் செலுத்தும் வசதியையும் அளிக்கிறது, அரசு பிணையங்கள் செட்டில்மென்ட்களுக்காக சிஎஸ்ஜிஎல் கணக்குச் சேவைகளை வழங்குகிறது, போர்ட்போலியோ முதலீட்டுத் திட்டத்தின் கீழ் வெளிநாட்டு போர்ட்போலியோ முதலீட்டாளர்களுக்கான (எப்பிஐகள்) கணக்குகளையும் வழங்குகிறது

## அந்நிய செலாவணி சேவைகள்

- வங்கி குறிப்பிட்ட கிளைகளில் வெளிநாட்டு வர்த்தகச் சேவைகள் மற்றும் வர்த்தக நிதி சேவைகள் ஏற்றுமதி, இறக்குமதி தீர்வுகளைக் கருத்தில் கொண்டு அளிக்கிறது. அவை
  - முன்னதாகப் பணம் பெறும் வசதி, நேரடியாகப் பணம் பெறும் வசதி, இறக்குமதி சேகரிப்புகள்
  - ஏற்றுமதி சேகரிப்புகள், ஏற்றுமதியில் முன்னதாகப் பணம்செலுத்தும் வசதி, ஏற்றுமதிகடன்
  - கடன் கோரும் கடிதங்கள், வங்கி உத்தரவாதம், அவசரத் தேவைக்கு உதவும் கடன் கோரும் கடிதங்கள்
  - வெளியே இருந்து வங்கிக்கணக்கிற்குள் பணம் அனுப்புதல், வங்கிக்கணக்கில் இருந்து வெளியே பணம் அனுப்புதல்
  - உள்நாட்டு வர்த்தகப் பொருள்
  - ஏற்றுமதி கடன் கோரும் கடிதங்கள் குறித்த அறிவுரை வழங்கல், மாற்றீடு, உறுதிப்படுத்தல்
  - இறக்குமதிக்கு பணமளித்தல்
- யெஸ் பேங்கின் மற்ற அந்நிய செலாவணி சேவைகள் –
  - எஃப்சிஎன் பண வைப்பு, எஃப்சிஎன் கணக்கு மாற்றம் (இஇஎஃப்சிஆர் எஃப்சி ac)

- பல நாணய டிராவல் கார்டு வழங்குதல்

- பல்வேறு நாணயங்களுக்கான SWIFT குறியீடுகளை வங்கிக் கிளையில் இருந்து பெறலாம். இவற்றை பதிவேடுகளில் பதிப்பதற்காகவும் பணம் அனுப்பும் பரிவர்த்தனைகளைச் செய்யும் போதும் பயன்படுத்தலாம்.
- உலகெங்கும் கிட்டதட்ட அனைத்து முக்கிய வெளிநாட்டு நாணயங்களில் பிரதிநிதி வங்கி முறையின் வலையமைப்பை நாங்கள் கொண்டுள்ளோம்.

## புகார்களின் குறைதீர்ப்பு

எங்கள் இணையதளத்தில் கிடைக்கும் குறைதீர்ப்பு தயவுசெய்து பாருங்கள்: www.yesbank.in